<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>O.S. No.46/2014</u>

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 10–ஆம் நாள் வா.சா.3 சாட்சி திரு.குமார் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.குமார் | தொழில் | : வருவாய் உதவியாளர் |
| த/பெ | : ராமசாமி | கிராமம் | : சத்தியமங்கலம் நகராட்சி |
| வயது | : | தாலுக்கா | : சத்தியமங்கலம் |

<u>வா.சா.3 : முதல் விசாரணை:</u>

நீதிமன்றத்திலிருந்து இவ்வழக்கைப்பற்றி சாட்சியம் அளிக்க சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளருக்கு கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் அவர் நேரில் ஆஜராக இயலாத காரணத்தினால் அவருக்கு ஆதரவாக வருவாய் உதவியாளராகிய நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி சாட்சியம் அளிக்க எனக்கு அனுமதிக்கடிதம் கொடுக்கப்பட்டது. அந்த அனுமதிக்கடிதம் **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் காளிமுத்து கவுண்டர் பெயரில் உள்ள பாரஸ்ட் டிப்போ கிழக்கு வீதியில் உள்ள கதவு எண்.46க்கான 1978 –79ம் ஆண்டிற்கான வீட்டு வரி இரசீது அசல். மேற்படி இரசீது **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் காளிமுத்து கவுண்டர் பெயரில் உள்ள பாரஸ்ட் டிப்போ கிழக்கு வீதியில் உள்ள கதவு எண்.46க்கான 1982ம்

ஆண்டிற்கான குடிநீர் இரசீது அசல். மேற்படி இரசீது **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் 06.02.1982ம் தேதியில் குடிநீர் வரி செலுத்தக்கோரி காளிமுத்து கவுண்டருக்கு அனுப்பிய அறிவிப்பு அசல். மேற்படி அறிவிப்பு **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்களிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் 2008–09ம் ஆண்டின் ஏப்ரல் மாதம் முடிய வீட்டுவரி இரசீதானது புதிய கதவு எண்.93 காளிமுத்து கவுண்டரின் பெயரில் உள்ளது. மேற்படி பதிவேட்டின் அடிப்படையில் 2008–09ம் ஆண்டின் தொ.மு.எண்.51ன்படி காளிமுத்து கவுண்டர் என்னும் பெயரிலிருந்து எஸ்.கே.மணி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேற்படி பெயர் மாற்றம் 15.05.2013ம் தேதியிட்ட வரி விதிப்பு எண்.7164ன் படி கேட்பு பதிவேட்டின்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேற்சொன்ன விவரங்கள் அடங்கிய பதிவேடு நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்ட உண்மை நகல் **சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்பதற்காக உத்திரவு நகல் மற்றும் பெயர் மாற்றம் செய்யக்கோரி தாக்கல் செய்த விண்ணப்பமும் தற்போது எங்கள் வசம் இல்லை. தற்போது உள்ள பதிவேடுகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன்.

ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.